



மதுராந்தகம் தெற்கு ஒன்றிய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பாக காவாத்தூர் ஊராட்சியில் மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கலந்து கொண்டு உரையாற்றி, கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். அருகில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், மதுராந்தகம் தெற்கு ஒன்றிய செயலாளர் சிவக்குமார், ஒன்றியச் செயலாளர்கள் வீ.தமிழ்மணி, எல். இதயவர்மன், பனையூர் பாபு மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### த.வெ.க. அமைச்சர்கள் சிலரின் தூண்டுதலில் - தி.மு.க. குறித்தும், ஆர்.எஸ்.பாரதி குறித்தும்

# அவதூறு - பொய்ச் செய்திகள் வெளியிடுவோர் மீது நடவடிக்கை எடுத்திடுக!

## சென்னை மாநகர காவல் ஆணையரிடம் – கழக சட்டத்துறை துணைச் செயலாளர் என்.மருதுகணேஷ் மனு!

சென்னை, செப். 24-

தி.மு.க. சட்டத்துறை துணைச் செயலாளர் வழக்கறிஞர் என்.மருதுகணேஷ் நேற்று முன்தினம் (22.9.2026), சென்னை பெருநகர காவல் துறை ஆணையரை நேரில் சந்தித்து இன்ஸ்டா சமூக வலைதளத்தில் *Prawin tvk, vivek alagarsamy and Sai Jegadheesh* என்ற பெயர்களில் உள்ள மூன்று பேர் தவெக அமைச்சர்கள் சிலர் தூண்டுதலின் பேரில் திராவிட முன்னேற்ற கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் குறித்தும், திமுக குறித்தும், அவதூறு பரப்பு வகையில் பொய்ச் செய்தி வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரியும், அத்தகைய பொய்யாக பொய்ப் பதிவுகளை வலைதளத்திலிருந்து உடனடியாக அகற்ற வேண்டியும் புகார் மனு அளித்தார்.

அந்த புகார் மனுவில் மருதுகணேஷ் கூறியிருப்பதாவது:

நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டத்துறை துணைச் செயலாளர் பொறுப்பு வகித்து வருகிறேன், மேலும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன்.

நேற்று முன்தினம் மதியம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் எங்களது கழக அமைப்புச் செயலாளரும், மூத்த வழக்கறிஞருமான ஆர் எஸ் பாரதி அவர்கள் செய்தியாளர் சந்திப்பின் போது, ஜெம் கிரானைட் அதிபர் வீரமணி அவர்கள் மீதுள்ள வழக்கு குறித்து கேட்டதற்கு , திமுக ஆட்சியின்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும், மிகத் தெளிவாக செய்தியாளர்களிடம் கூறினார்கள். இது அனைத்து ஊடகங்களிலும், செய்தித்தாள்களிலும் வெளிவந்துள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு இன்ஸ்டா சமூக வலைதளத்தில் *Prawin tvk, vivek alagarsamy and Sai Jegadheesh* என்ற பெயர்களில் உள்ள மூன்று பேர் தி.மு.க. மூத்த தலைவர் ஆர் எஸ் பாரதி அவர்கள் அளித்த பேட்டியினை திரித்து பொய்யான, அவதூறான தகவலை அவர் கூறியதாக கூறி வீடியோ பதிவாக வெளியிட்டுள்ளனர், மேலும் அந்த சமூக வலைதளப் பதிவுகளில் பதிவு செய்த அந்த நபர்கள் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தெரிவிக்காத கருத்துக்களை தெரிவித்ததாகவும், மற்றும் கடந்த கால தி.மு.க. ஆட்சி குறித்து அவதூறாகவும், தி.மு.க. தலைவர்கள் மீதும், தி.மு.க. தொண்டர்கள் மீதும் உண்மைக்கு புறம்பான கருத்துக்களை கூறி, மிகவும் அசிங்கமான, இழிவான வார்த்தைகளால் திட்டி அந்தப் பதிவை வெளியிட்டுள்ளனர், இவ்வாறு பொய்யான தகவலை தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், "இனியும் நீங்க வேடிக்கை மட்டும் பார்ப்பீர்களா?" என பொதுமக்களை கலவரத்தை தூண்டும் வகையில் பேசியுள்ளார்கள். இவர்களது இந்த உண்மைக்குப் புறம்பான, பொய்யான சமூக வலைதளபதிவு களை ஆயிரக்கணக்கான பொது மக்கள் பார்த்துள்ளனர், பார்த்தவர்கள் மனதில், மக்கள் மத்தியில் மிகவும் செல்வாக்கான நிலையில் உள்ள தி.மு.க.வின் மூத்த தலைவர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் மீதும், தி.மு.க. மீதும், தி.மு.க. தலைவர்கள் தொண்டர்கள் மீதும், ஒரு தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்தும் வகையில் அவரது இந்த பொய் வீடியோ பதிவு அமைந்துள்ளது, இதனால் திமுக மூத்த தலைவர் ஆர் எஸ் பாரதி அவர்களின் புகழுக்கும், தி.மு.க.வின் புகழுக்கும் களங்கம் ஏற்படும் என்ற அச்சம் உள்ளது.

மேலும் இந்த சமூக வலைதள பதிவுகளில் அவர்கள் தெரிவித்துள்ள பொய்யான கருத்துகளால் தமிழ் நாட்டில் இருதரப்பினர் இடையே மோதல் உண்டாகி சட்டம் ஒழுங்கு சீர்குலையும் அபாயமும் உள்ளது.

மேலும் மேற்கண்ட அந்த நபர்கள் வெளியிட்ட இன்ஸ்டா சமூக வலைதள பதிவுகளின் பின்னணியில் இந்நாள் அமைச்சர்கள் சிலரின் தூண்டுதல் இருக்குமோ என்ற சந்தேகமும் உள்ளது.

எனவே தி.மு.க.வின் மூத்த தலைவரும், மூத்த வழக்கறிஞருமான ஆர்எஸ் பாரதி அவர்கள் மீதும், தி.மு.கழகத்தின் மீதும் பொய்யான, உண்மைக்கு புறம்பான கருத்துக்களை வெளியிட்ட இன்ஸ்டா சமூக வலைதளத்தில் *Prawin tvk, vivek alagarsamy and Sai Jegadheesh* என்ற பெயர்களில் உள்ள மூன்று பேர் மீதும், இந்த பொய்யான கருத்துக்களை பதிவு செய்வதற்கு பின்னணியில் இருந்து தூண்டிய அமைச்சர்கள் யார் என்றும் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மேலும் தி.மு.க.வின் மூத்த தலைவர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தெரிவிக்காத கருத்துக்களை, தெரிவித்ததாக கூறி பொய்யான உண்மைக்கு புறம்பான தகவல்களை இன்ஸ்டா சமூக வலைதளத்தில் *Prawin tvk, vivek alagarsamy and Sai Jegadheesh* என்ற பெயர்களில் உள்ள மூன்று பேர்கள் வெளியிட்ட பதிவுகளை உடனடியாக நீக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்;

இதைப்போலவே மற்ற ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங்களில் உண்மைக்கு புறம்பானை செய்திகளையும், பதிவுகளையும் உடனடியாக நீக்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்றம் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு என்.மருதுகணேஷ் தெரிவித்துள்ளார்.

### அமெரிக்க நியூசெர்சி மாநிலத்தில்

# 'திராவிட நாள்' கருத்தரங்கம்!

## தமிழ்க் கேள்வி செந்தில்வேல் பங்கேற்பு!

நியூயார்க், செப். 24-

அமெரிக்காவில் முதல் முறையாக நியூசெர்சி மாநிலத்தில் அமெரிக்க தமிழர்களால் செப்டம்பர் மாதம் 19 & 20 தேதிகளில் "திராவிட நாள்" கருத்தரங்கு "திரைகடல் ஓடியும் திராவிடம் தேடு" என்னும் கருப்பொருளில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இக்கருத்தரங்கையொட்டி அமெரிக்காவில் நியுசெர்சி, சிகாகோ, அட்லாண்டா, டாலஸ், சான் பிரான்ஸ்கோ, வாசிங்கடன் DC ஆகிய நகரங்களில் பெரியார் பிறந்த நாள் நடை ஓட்டமும் நடைபெற்றது.

அமெரிக்காவில் இயங்கும் திராவிட அமைப்புகளான வெளிநாடு வாழ் தமிழர் இந்தியர் நலச் சங்கம் (NRTIA USA), பெரியார் பன்னாட்டமைப்பு, பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம் (PASC) ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய "திராவிட நாள்" கருத்தரங்கில் மூத்த ஊடகவியலாளரும் தமிழ்க் கேள்வி செந்தில்வேல் அவர்கள் சிறப்பு விருந்தின ராக கலந்து கொண்டார் இக்கருத்தரங்கை குழுவின் தலைவர் மருத்துவர் சோம.இளங்கோவன், செயலாளர் நியு செர்சி பாலா, பொருளாளர் இரவி பெருமாள்சாமி ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

செப்டம்பர் மாதம் என்பது பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள், திராவிட முன்னேற்ற கழகம் துவங்கிய நாள் என பலச் சிறப்புகளை கொண்ட முப்பெரும் விழாவாக இக்கருத்தரங்கு நடைபெற்றது.

கருத்தரங்கை திராவிடர் கழகத்தின் பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி அவர்கள் திராவிடத்தின் சிறப்புகளை கூறி கருத்தரங்கை துவக்கி வைத்தார்.

கருத்தரங்கிற்கு திராவிடர் கழகத்தின் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் அவர்கள் தமிழர்கள் திராவிடத்தை நாட வேண்டிய அவசியம் என்றும், எதிர்க்கட்சித் தலைவர் "உதய நிதி ஸ்டாலின்" அவர்கள் இன்றைய சூழலில் அனைவரும் திராவிட கொள்கைகளை, தமிழர்களுக்கு அதனால் ஏற்பட்ட பயன்களை நாம் அனைவருக்கும் சொல்ல வேண்டிய கட்டாயம் இருப்பதை சொல்லி திராவிடம் வெல்லட்டும் எனக் கூறி வழங்கிய வாழ்த்து செய்தி ஒலிப்பரப்பட்டது.

1. கருத்தரங்கில் பத்து வயது நிரம்பிய ஆதவன் "We are Dravidians" என்னும் தலைப்பில் பேசினார்.

2. திராவிட இனத்தின் வரலாறாக அயோத்திதாச பண்டிதர் காலத்திலிருந்து, நீதிகட்சி, தந்தை பெரியார், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்ற கழகம் ஆகியவற்றால் தமிழினத்திற்கும், தமிழ் மொழிக்கும் தமிழ்நாட்டிற்க்கும் ஏற்பட்ட பயன்களை அம்பேத்கர் கிங்ஸ்டி சர்க்கிள் அமைப்பை சேர்ந்த கார்த்தி, மருத்துவர் சோம இளங்கோவன், ம.வீ. கனிமொழி, நியுசெர்சி பாலா, இரவி ஆகியோர் விரிவாக எடுத்துரைத்தனர்.

3. குழந்தைகள் திராவிட தலைவர்களை ஓவியமாக்கும் போட்டி, இளம் பருவ வயதினரான சிகாகோ ஹரி, லண்டன் மீரா ஆகியோர் திராவிட கொள்கைகளின் சிறப்பு களை இந்த கால தலைமுறைக்கு ஏற்றவாறு சமூக வலைதளங்களில் செயல்படுவதை விளக்கினர்.

4. இறுதியாக தமிழ்க் கேள்வி செந்தில்வேல் அவர்கள் திராவிட இனத்தால் தமிழ் சமூகம் அடைந்த பயன்களை, அதன் கொள்கைகளை நம் குடும்பத்தில் பேச வேண்டிய அவசியத்தையும், அடுத்த தலைமுறைக்கு இதை எடுத்த செல்ல வேண்டிய கடமை நம் அனைவருக்கும் இருப்பதை மிகச் சிறப்பாக எடுத்துரைத்தார்.

இக்கருத்தரங்கிற்கு லண்டன், அமெரிக்காவின் நியுயார்க், நியுசெர்சி, டெலவேர்,

பென்சில்வேணியா, விர்ஜீனியா, கரோலினா, மில்வாக்கி, டாலஸ் ஆகிய மாநிலங்களிலிருந்து அமெரிக்க தமிழர்கள் குடும்பங்களோடு கலந்து கொண்டனர்.

இறுதியாக இவ்விழாவை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து அமெரிக்காவில் நடத்துவோம் என்றும், திராவிட கொள்கைகளை அடுத்த தலைமுறைகளுக்கு கொண்டு செல்வோம் என ஒவ்வொருவரும் உறுதி கூறினர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்ள 15, 16, 20 வார்டுகள், வாக்குச்சாவடி எண்கள் 163, 164, 165 க்குட்பட்ட வாக்குச் சாவடி நிலை முகவர்கள், உறுப்பினர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் மாவட்ட, நகர, பகுதி, வட்டக் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நகர துணை செயலாளர் வெ.கமலக்கண்ணன் தலைமையில், நகர செயலாளர் எஸ்.முருகானந்தம் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருப்பூர் வடக்கு மாநகர கழகப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் உரையாற்றினார். இதில் திருப்பூர் மாநகராட்சி மண்டலதலைவர் தம்பி ஆர்.கோவிந்தராஜ், வி.வி.ஜி.காந்தி மாமன்ற உறுப்பினர் வெ.ராதாகிருஷ்ணன், மாநகர துணைச் செயலாளர்கள் ராமசாமி, செங்குட்டுவன், பொருளாளர் சரவணக்குமார், வட்டக் கழக செயலாளர் நல்ல சேனாதிபதி, பிரதிநிதிகள் கோவிந்தராஜ், கலைச்செல்வி, சக்திவேல், ரத்தன் சிங், ரவீந்திரன், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் அருண்குமார், ரவீந்திரன், செல்லப்பன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

# செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

## (21.09.2026)



சென்னையில் பழைய வண்ணாரப் பேட்டையில் இளைஞர் கழுத்தறுத்து கொலை.

அரியலூரில் கொலை சம்பவத்தை கண்டித்து மக்கள் போராட்டம் நடத்த வந்ததால் ஆட்சியர் அலுவலக வாயில் கதவை மூட உத்தரவு.

தூத்துக்குடி – பெண்ணுக்குப் பாலியல் தொல்லை அளித்த த.வெ.க. நிர்வாகியின் சகோதரர் தட்டிக் கேட்ட பெண்ணின் குடும்பத்தினர் மீது கொலை முயற்சி தாக்குதல்.

சேலம் மாநகராட்சி குறிஞ்சி நகர் பகுதியில் கஞ்சா போதையில் அரிவாளுடன் பொதுமக்கள், பெண்களுக்கு கொலை மிரட்டல் விடுத்த இளைஞர்கள்.



பெரம்பலூர் - அரசு பேருந்து ஓட்டுநர் மீது மது போதையில் தாக்குதல் நடத்திய த.வெ.க நிர்வாகிகள்.

வானகரம் பகுதியில் அதிகாலை வீட்டின் வெளியே வந்த பெண்ணிடம் தவறாக நடக்க முயன்ற நபர் கைது.

விநாயகர் சிலை ஊர்வலத்தின் போது ஏற்பட்ட தகராறில் காவல்துறை முன்னிலையிலேயே பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த இருவர் தாக்கப்பட்ட சம்பவம்.

பதினோராம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த கல்லூரி மாணவன் கைது.

ஏழைகளுக்கு ரூ.1 இட்லி வழங்கும் மூதாட்டியையும் ஏமாற்றிய த.வெ.க. அரசு – கோவை ஒரு ரூபாய் இட்லி பாட்டிக்கு வழங்கப்பட்டு வந்த இலவச சமையல் எரிவாயு சிலிண்டர் திடீர் என ரத்து செய்யப்பட்டதால் அதிர்ச்சி.

செங்கல்பட்டிலிருந்து நேபாளம் சென்றவர் மாயம்.. நடவடிக்கை எடுக்காத அரசுக்கு கண்டனம் - சாலையோரம் அமர்ந்து ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய உறவினர்கள்.



தாராபுரம் தொகுதி த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமாவிற்கு பிரச்சாரத்திற்குச் செல்லும் இடங்களில் மக்கள் எதிர்ப்பு - போலீசார் பாதுகாப்புடன் பிரச்சாரம் செய்யும் த.வெ.க. வேட்பாளர்.

திருவள்ளூர். பொன்னேரி அரசு மருத்துவமனையில் பணியாற்றி வரும் தற்காலிக ஊழியர் ராஜேஸ்வரி என்பவர் மீது மருத்துவமனை வளாகத்தில் பெட்ரோல் ஊற்றி தீ வைப்பு. 50% தீக்காயங்களுடன் ஆபத்தான முறையில் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பு. பொன்னேரி காவல்துறை விசாரணை.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து பொட்டிக்காம்பாளையம் ஊராட்சி எருக்கலாம் பாளையத்தில் குடிமங்கலம் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் கவிதா கிரி வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ரகுபதி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் கார்த்திகேயன், மாவட்டப் பிரதிநிதி உதயகுமார், பி.ஏ.பி. பகிர்மான குழு தலைவர் குருசாமி, விருகல்பட்டி கிளை கழக செயலாளர் ஜெயப்பிரகாஷ், இலுப்பநகரம் பிரகாஷ், கிருஷ்ணராஜ், எருக்கலாம் பாளையம் கிளை செயலாளர் சோமு, தலைவர் ஈஸ்வரன், சென்னியப்பன், பிரகாஷ், பிரியா உள்பட பலர் கலந்து கொண்டனர்.